REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ PHONE: 35636

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 20உ வியாழன் (6—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 21உ வெள்ளி (7—10—55) [இதழ் 97

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின் சென்னை வருகை

வேலூர், அக். 5—

இந்தியாவிற்கு அண்மையில் வரவிருக்கிற சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் ஆகியோர் சென்னை நகருக்கும், சில மாவட்டங்களுக்கும் வரக்கூடும் என்று முதன் மந்திரி காமராசர் இங்கு தெரிவித்திருக்கிறார்.

நவம்பர் திங்கள் இறுதியில் அவர்கள் வரக்கூடும் என்றும் தெரிவித்திருக்கிறார் காமராசர்.

அலகாபாத் பண்டிதர் அச்சுறுத்துகிறார்!

'இந்திய யூனியனை' இனி துண்டாட அனுமதிக்கமாட்டாராம்!

திராவிட நகரங்களில் பண்டித நேருவின் ஏகாதிபத்திய வாதம்

" சுதந்திரம் பெற்ற நேரத்தில் இந்தியா பிரிக்கப்பட்டதினால் (பாகிஸ்தான் பிரிந்ததினால்) நாம் ஏற்கனவே போதுமான அளவு கஷ்டங்களை அனுபவித்துள்ளோம்; நாம் அந்தப் பிரிவினைக்கு ஒத்துக்கொண்டோம்—சம்மதித்தோம்; இப்போது, மீண்டும், 'பிரிவினை' என்ற பிரச்சினையே எழக்கூடாது; அது முடிந்துவிட்டது;

" இந்தியாவின் எந்த ஒரு பகுதியிலும்-எந்த ஒரு சூழ்நிலையிலும், 'பிரிவினை வேண்டும்'—என்று எவராயிருப்பினும்—குரல் எழுப்புவது, எதிர்காலத்தில் நிச்சயம் அனுமதிக்கப்படமாட்டாது என்பதை எல்லோரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்,"

என்று, பண்டித நேரு, வேலூரில் பேசிய கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கடலூரில் பேசியபோது பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதாவது:—

" இந்திய யூனியன் என்ற அமைப்பைப் பெற்றுவிட்ட நாம், அந்த யூனியன் எப்போதும் இப்படியே பிரிக்க முடியாதபடி ஐக்கியமாக நீடித்திருக்குமாறு பார்த்துக்கொள்ளத் தவறமாட்டோம்; இந்திய யூனியனை எவரும் துண்டாடவிடமுடியாது; எவரும் நம்மைப் பிரித்துவைக்குமாறு செய்ய நாம் அனுமதிக்கமாட்டோம்."

ரூ. 5 கோடியில் ஒரு புதிய திட்டம்

அகதிகள் காலனியில் குடிசைத் தொழிலாம்!

ஆமதாபாத், அக். 5—

நாட்டில் உள்ள அகதிகள் காலனியில் குடிசைத் தொழில் ஏற்படுத்துவதற்கு ஊக்கமளிக்க இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

இதற்கென இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

10 உயிர்களை பலிகொண்ட லாரி விபத்து

பத்தேகர், (உ. பி.) அக். 4—

இரும்புக் குழாய்கள் ஏற்றிவந்த ஒரு லாரி கவிழ்ந்ததின் விளைவாக 10 பேர் கொல்லப்பட்டு, 15 பேர் காயமடைந்தனர். இந்த லாரியில் 25 பேர் இருந்தனர்; லாரி கவிழ்ந்தபோது, இரும்புக் குழாய்களின் கீழ் சிக்கிக்கொண்டு ஒரு பெண், 2 குழந்தைகள் உள்பட 8 பேர் மரணமடைந்தனர்; மற்றும் இருவர் பின்னர், மருத்துவமனையில் மாண்டனர்.

வடநாட்டு உச்சி முதல் குமரிமுனை வரை இந்தியா ஒரே நாடாம்!

உலக சரித்திரம் எழுதிய பண்டித நேருவின் பித்தலாட்டம்

" தமிழ் நாட்டில் சிலர் தேசியக் கொடியை அவமதிக்கத் துணிந்ததாகக் கேள்விப்பட்டேன்; எவரேனும் தேசியக் கொடிக்கு எதிராகச் சிறு விரல் அசைத்தாலும், நாம் வாளாவிருக்கமாட்டோம்; அவர்களை ஒரு 'கை' பார்ப்போம்; ஏனெனில், எதிர்காலத்தில் எவரும் தேசியக் கொடியை அவமதிப்பதற்கு விரலசைக்கவும் துணியக்கூடாது; ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்—தேசீயக் கொடியை அவமதிப்பதை, என்ன நேரிட்டாலும் நாம் பொறுத்துக்கொள்ள மாட்டோம்; இந்தியாவே அழிந்துபட்டாலும் அதனை சகித்துக் கொண்டிருக்கமாட்டோம்;

" இந்தப் பரந்த உலகில் எப்பக்கமிருந்து இந்த தேசீயக் கொடிக்கு அவமதிப்பு நேரிடினும் நாம் அதை அனுமதிக்க முடியாது;

" எந்தவித சமரசத்திற்கும் நாம் இணங்க முடியாத விஷயங்கள் பற்றி எவருக்கும் சந்தேகம் வேண்டாம்;

" 'இந்தியாவின் ஒற்றுமை,' தேசீயக் கொடியின் கௌரவம்—இவை இரண்டு விஷயங்கள் பற்றியும் நாம் எவருடனும் சமரசம் பேசமாட்டோம்;

" தேவையானால், இந்த அடிப்படையான விஷயங்களில் நமது கொள்கையை நிலைநாட்ட அரசாங்கத்தின் முழு ஆற்றலையும் பயன்படுத்தத் தயங்கமாட்டோம்;

" வடநாட்டு உச்சியிலிருந்து, தெற்கே குமரி முனை வரை இந்தியா ஒரே நாடுதான்; என்ன நேர்ந்தாலும், எவர் என்ன செய்தாலும், அந்த இந்தியா ஒன்றாகவேதான்—ஒரே நாடாகவேதான் இருக்கும்,"

—என்று, பிரதமர் பண்டித நேரு, வேலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மலிவான விலையில் இலக்கிய நூல்கள்

பெரும் அளவில் பிரசுரிக்க இந்திய சர்க்கார் திட்டம்

சென்னை, அக். 5—

" இந்தியாவின் எல்லா மொழிகளிலும் அயல்நாட்டு இலக்கியங்களை மொழி பெயர்த்து, பெரும் அளவில் புத்தகங்களைப் பிரசுரித்து, மலிவான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் பரவலான திட்டம் பற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது,"

என்று, பிரதமர் நேரு தென்னிந்திய மொழிகளில் புத்தகங்களைப் பிரசுரிக்கும் நிறுவனத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் போராட்ட 'சுதந்திரப் படை' ஒரு தலைமையில் இயங்கும்?

அல்ஜீரியா, மொராக்கோ வீரர்கள் ஒன்றுபடுகின்றனர்

கெய்ரோ, அக். 5—

அல்ஜீரியாவையும், மொராக்கோவையும் விடுவிப்பதற்கு இருநாடுகளிலும் நடைபெறும் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகள் ஒரே தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், 'வட ஆப்பிரிக்க சுதந்திரப் படை' ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

" வட ஆப்பிரிக்காவின் சுதந்திரப் போராட்டம் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கிறது; வட ஆப்பிரிக்கா சுதந்திரம் பெறுவதற்கும், முகமது பென் யூசப் மீண்டும் ஆட்சி பீடத்திற்குத் திரும்புவதற்கும், விடுதலைப் படையினர் கூட்டு இராணுவ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது; சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் கூட்டுநிறுவனத்தின் தலைமைக் காரியாலயம், இரகசிய இடமொன்றில் ஏற்படுத்தப்படும்," என்று, மொராக்கோ தேசியக் கட்சித் தலைவர் கூறியுள்ளாராம்.

பிரெஞ்சுப் படைகள் பரிதவிப்பு?

அட்லாஸ் மலைப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் போரிட்டு வரும் பிரெஞ்சுப் படைகளைச் சுற்றிலும், கிளர்ச்சிக்காரர்கள் நீயிட்டு விட்டனராம்; தீயின் மத்தியில் சிக்கிக்கொண்டுள்ள பிரெஞ்சுப் படைகளை மீட்பதற்காக, அப்பகுதிக்கு மேற்கொண்டு படைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், கிளர்ச்சிக்காரர்களின் கை ஓங்கியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்திய வர்த்தகர்களுக்கு இரட்டிப்பு வரி விதிப்பு

தவிர்ப்பதற்கு விரைவில் ஒப்பந்தம்

புதுடில்லி, அக். 5—

பர்மாவில் உள்ள இந்திய வர்த்தகர்களின் வருமானத்தின் மீது இரட்டிப்பு வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்காக, இந்தியா—பர்மா ஆகிய இரு நாடுகளிடையேயும் ஒரு ஒப்பந்தம் சீக்கிரமே ஏற்படும் என்று தெரியவருகிறது.

பர்மாவிற்கு இந்தியா கடன் தந்து உதவ வேண்டும் என்று கோருவதற்காகப் புதுடில்லிக்கு வந்த பர்மியத் தூதுக் குழுவினருடன் இது குறித்துப் பேசப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இரட்டிப்பு வரி விதிப்பைத் தடுப்பதற்காகத் திட்டங்கள் சீக்கிரமே பர்மா சர்க்காருக்கு அனுப்பப்படும் என்றும் தெரியவருகிறது.

இதேபோன்ற உத்தேசத் திட்டங்கள், இலங்கையில் உள்ள இந்திய வர்த்தகர்களைப் பொறுத்து இலங்கை சர்க்காருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிகிறது.

போராட்டத் தலைவர்—புதிய கவர்னர் சந்திப்பு

சைப்ரஸ் தீவில் ஆர்ப்பாட்டங்கள்

'வீட்டை விட்டே வெளிவரக்கூடாது' எனும் ஊரடங்குச் சட்டம் அமுலாகிறது

நிகோசியா, அக். 5—

பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் சைப்ரஸ் தீவில் பிரிட்டிஷ் இராணுவத்தினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடந்தவண்ணமுள்ளன.

புதிய கவர்னராக சர். ஜான் ஹார்டிங் எனபார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர், 'சைப்ரஸ், கிரீஸ் நாட்டுடன் இணையவேண்டும்,' என்று கோருகிற போராட்ட இயக்கத் தலைவரான மகாரியஸ் பாதிரியாரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

மேலும், சைப்ரஸ் தீவில் உள்ள துருக்கியர்களின் பிரச்சினைகள் குறித்து மூவரடங்கிய துருக்கிய தூதுக் குழுவினரையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இதற்கிடையில், தீவின் சில கிராமங்களில், 'வீட்டை விட்டே எவரும் வெளிவரக்கூடாது,' என்று விதிக்கும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

தீவிரவாதிகள் சிலரால் இரு கிராமங்கள் தாக்கப்பட்டதாயும், அப்போது, கிராமத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வெள்ளை இராணுவத்தினர் சிலர் கல்லடித் தாக்குதலுக்கு ஆளானதாகவும் தெரியவருகிறது.

இராணுவத்தினர் அந்தப் 'பயங்கரவாதி'களைத் தேடிப்பிடிப்பதில், தீவிர கவனம் செலுத்திவருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

ஆலைத் தொழிலாளர் வருமானம்

வட நாட்டு மாநிலங்களைவிட சென்னையில் மிகக் குறைவு!

புதுடில்லி, அக். 5—

தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களின் ஆண்டு வருமானம் பம்பாய், டில்லி, பீகார், அசாம் ஆகிய மாநிலங்களில் மிக அதிகமாக இருப்பதாகவும், சென்னையில் மிகக் குறைவாயிருப்பதாயும் கடைசியாகக் கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரிசா, பஞ்சாப், ஆஜ்மீர் ஆகிய மாநிலங்களிலும், இதர வடநாட்டு மாநிலங்களைவிட தொழிலாளரின் வருமானம் குறைவாயிருக்கிறதாம்!

கி. வங்க அரசியல் கைதிகள் விடுதலை

முதலமைச்சர் முயற்சி

டாக்கா, அக். 5—

கிழக்கு வங்க முதன் மந்திரி அபுஉசேன் சர்க்கார், சிறை வைக்கப்பட்டுள்ள எல்லா அரசியல் கட்சியினரையும் விடுதலை செய்து வருகிறார்.

இந்த ஆண்டு ஜூன் திங்கள் துவக்கத்தில் பதவி ஏற்ற அவர் இதுவரை சுமார் 500 அரசியல் கைதிகளை விடுவித்திருக்கிறார்.

தினந்தோறும் அரசியல் கைதிகள் விடுதலை பற்றியும், அரசியல்வாதிகள் மீது, விதிக்கப்பட்டுள்ள தடைகள் பற்றியும் பரிசீலித்து, அவர்களுக்கு விடுதலை வழங்குவதில் முதன் மந்திரி தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

அக்டோபர் திங்கள் முதல் கிழமைக்குள் எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட்டுவிடுவர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—10—'55 வியாழன்

அநீதி தொடருகிறது!

'தென்னாடு வேறு — நமது வடநாடு வேறு' என்று இந்தியப் பேரரசினர் கருதுவதினால்தான், அபிவிருத்தித் திட்டங்கள் என்றழைக்கப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டு மாநிலங்களுக்கு நியாயமான பங்கு தரப்படவில்லை — என்பதை, நாம் அவ்வப்போது தகுந்த காரண விளக்கங்களுடன் எடுத்துக் காட்டி வருகிறோம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும்கூட, தென்னாட்டு மாநில அரசாங்கங்களின் வெகு நியாயமான கோரிக்கைகளை வடநாட்டு ஆட்சியாளர் புறக்கணித்திருப்பது திட்டமிட்டுச் செய்யப்படும் சதி — என்று நாம் கூறுவது, 'ஆதாரங்களற்ற குற்றச் சாட்டு' என்று எவரும் இதுவரை கருத்தறிவித்ததில்லை.

தென்னாட்டுமாநிலங்களுக்கு, கட்டுப்பாடாக வடநாட்டவர் இழைக்கும் இந்த அநீதி, அவர்களது ஏகாதிபத்தியப் போக்கைத்தான் நமக்கும், உலகுக்கும் தெளிவாகச் சொல்லுகின்றன — என்றும், நாம் இங்கு பலமுறை எழுதி வந்திருக்கிறோம்.

தொழில் துறையில் தென்னாடு, ஏற்கனவே வெள்ளையராட்சிக் காலத்திலேயே, வடநாட்டைவிட மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்ற உண்மையைத் தெரிந்து கொள்ள ஆராய்ச்சி ஏதும் நடத்தத் தேவை இல்லை — பழுதுபடாத கண்களிருந்தால் போதும்.

அப்படிப் பின்தங்கிய நிலையில் உள்ள தென்னாட்டில்தான் — இந்தியப் பேரரசினர், இந்தியா முழுமையும் வாழும் மக்களை, 'ஒரே நாட்டவர்' என்று கருதுவதாகக் கூறித்திரிவது உண்மையாயிருந்திருக்குமானால் — முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் துவங்கிய பெரும் தொழிற்சாலைகளை எல்லாம் துவக்கியிருக்க வேண்டும்; அப்போதுதான், ஏற்கனவே வளர்ந்திருந்த வடநாட்டுடன் தென்னாடு, ஒப்ப முன்னேற முடியும்; ஆனால், அவர்கள் செய்தது என்ன? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முழுப் பயனும் வடநாட்டவருக்கே கிடைக்குமாறு செய்தனர். இந்த உண்மை, நியாய உள்ளங்கொண்ட அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். இந்த அநியாயத்திற்குச் சமாதானம் கேட்டபோது, 'இரண்டாம் திட்டத்தில் நியாயம் கிடைக்கும்' என்று இங்குள்ள மாநில ஆட்சியாளர் தெரிவித்து வந்தனர். ஆனாலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாட்டு மாநிலங்களுக்கு, முதல் திட்டத்தில் இழைக்கப்பட்டது போன்றே, அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. 'இதற்கு என்ன சமாதானம்' என்று கேட்டால், 'கிடைத்தவரையில் திருப்தி,' என்று மாநில மந்திரிகள் பதில் தருகின்றனர்.

'சென்னை சர்க்கார், இரண்டாம் திட்டத்திற்காகக் கேட்ட தொகை ரூ. 400 கோடி; ஆனால், கிடைத்த தொகையோ ரூ. 200 கோடிதான்,' என்ற சோக முடிவே தொடர்ந்து, தென்னாட்டு மாநிலங்கள் எல்லாவற்றின் திட்டங்களுக்கும் கிடைக்கின்றன.

'ஆந்திர சர்க்கார் கேட்டதோ, ரூ. 225 கோடி; கிடைத்ததோ ரூ. 120 கோடி' என்று சில நாட்களுக்கு முன்பு செய்தி வந்தது.

இப்போது, திரு—கொச்சிக்கும் 'பட்டை நாமம்'தான் சாத்தப்பட்டிருக்கிறது — வடநாட்டு ஆட்சியாளரால்!

ரூ. 131.88 கோடி பெறுமான திட்டத்தைச் சுமந்து கொண்டு டெல்லிக்குச் சென்றனர்—திரு - கொச்சி முதன் மந்திரியும், குழுவினரும்; தென்னாட்டிற்கென அவர்கள் ஏற்கனவே தயாரித்துள்ள கணிதப்படி, திட்டக் குழுவினர், திரு-கொச்சி மாநிலத்தின் ரூ. 131.88 கோடி திட்டத்தை ரூ. 65 கோடி பெறுமான திட்டமாகச் சரிபாதி வெட்டியிருக்கின்றனர்.

பின்னர், இந்த நிலைகண்டு வருந்திய திரு-கொச்சி முதன் மந்திரி, தனது வடநாட்டுத் தலைவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி, 'திட்ட மதிப்பை ரூ. 85 கோடியாக உயர்த்தியிருக்கிறார்' என்று, உறுதியாகாத செய்திகள் கூறுகின்றன.

பதினைந்து குமாஸ்தா உத்தியோகங்களுக்கு மூவாயிரம் பட்டதாரிகள் மனுச் செய்தனர் — திருவாங்கூரில் உள்ள கணக்கு தணிக்கை அலுவலகத்தில்,' என்று, சில நாட்களுக்கு முன்பு ஒரு செய்தி வந்தது. பதினைந்து இடங்களுக்கு மூவாயிரம் பட்டதாரிகள் மனுப் போடுகிற அளவுக்குப் படித்தோரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது; படித்துப் பட்டம் பெற்றவரிடையே இந்தக் கொடுமை இப்படி என்றால், அரைகுறைப் படிப்பு பெற்றோர், படிக்கவே இல்லாதோர் இவர்களிடையே வேலையில்லாக் கொடுமை எவ்வளவு கடுமையாக இருக்க முடியும்?

இந்த நிலையில் அவதியுறும் தென்னாட்டு மாநிலங்களின் திட்டங்களை பாதியாக வெட்டுவதில் ஈடுபடுகின்றனர், வடநாட்டு ஆட்சியாளர்கள்! அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாட்டைத் தொடர்ந்து புறக்கணிக்கின்றனர்! மனமறிந்து அவர்கள் புரியும் இந்த அநீதியை மறைக்க, வடநாட்டவர், 'ஒற்றுமை' கீதம் இசைக்கின்றனர்.

வேடிக்கை என்னவெனில், அந்த 'ஒற்றுமை' கீதத்திற்கு இங்குள்ள மாநில ஆட்சியாளரும் தவறாமல் 'தாளம்' போடுவதுதான்!

வடநாட்டவரின் நீடித்து வரும் அலட்சியப் போக்கிற்கு, தென்னாடு, குறுகிய எதிர்காலத்தில் நல்ல பதில் தரத்தான் போகிறது என்பதை நாம் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை!

பொட்டி சீராமுலுவின் தியாகம்

ஆந்திர சட்டசபையில் கேலி செய்யப்படுகிறது!

"ஆந்திர மாநில அமைப்புக்காக உண்ணாவிரதமிருந்து, பொட்டி-சீராமுலு மரணமடைந்தது தற்கொலைக்கு ஒப்பாகும்; அவரது தற்கொலையினால்தான் ஆந்திர மாநிலம் கிடைத்தது என்பதை என்னால் ஏற்க முடியாது,"

என்று, காங்கிரஸ் உறுப்பினரான ஜி. பாப்பையா என்பவர் ஆந்திர சட்டசபையில் கூறியபோது, சபை உறுப்பினர்கள் அவருக்கு எதிராகக் குரலெழுப்பினர்.

சென்னையில், திரு. சீராமுலு உண்ணாவிரதமிருந்து இயற்கை எய்திய கட்டிடத்தை ரூ.25,000-த்திற்கு விலைக்கு வாங்கி, அவரது நினைவுச் சின்னமாக வைத்திருப்பதென்றும், இதற்கான மானியத்திற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் கோரும் சர்க்காரின் மானியக் கோரிக்கை மீது பேசுகையில் அந்த உறுப்பினர் அவ்வாறு கூறினார்.

'தற்கொலையை நாம் கௌரவப் படுத்தக்கூடாது' என்று அழுத்தமாக அந்த உறுப்பினர் கூறினார்.

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. சுந்தரையா உறுப்பினரது பேச்சை ஆட்சேபித்தார்.

உறுப்பினரின் சொந்தக் கருத்தே அது என்றும், காங்கிரஸ் கட்சிக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும் ஐக்கிய காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் துணைத் தலைவர் திரு. கானேசுவர ராவ் கூறினார்.

ஆனால், அதே கட்சியின் தலைவர் கோபால ரெட்டி உடனே எழுந்து, 'தன்னுடைய கருத்தை வெளியிடுவதற்கு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது' என்றார்.

இதற்குப் பின்னர் திரு பாப்பையா எழுந்து சொன்னார்:—

"தியாகிகளுள் தியாகியாகவும்; வீர புருடர்களுள் ஒரு வீரராகவும் பொட்டி சீராமுலு இருக்கலாம்; ஆனால், 'அவருடைய தற்கொலையினால்தான் ஆந்திர மாநிலம் கிடைத்தது' என்பதை நான் ஏற்றுக்கொள்ள இயலாது."

அவர் அவ்வாறு கூறியதும், சபையில் பாதிப் பேர் எழுந்து நின்று கண்டனக் குரல் கிளப்பினர்; சபாநாயகராலும் இரண்டு நிமிடங்கள் ஒன்றுமே செய்யமுடியவில்லை; பின்னர், அவர், உறுப்பினருக்குள்ள உரிமையை விளக்கினார்.

கோதுமை விளைச்சல்

இந்தியாவில் 85,00,000 டன்களாம்!

உலக நாடுகளின் நிலைமை

இந்தியாவில் கோதுமை விளைச்சல் பெருகியிருப்பதாக சமீபத்தில் வெளியான காமன்வெல்த் பொருளாதாரக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

விளைச்சல் மதிப்பு சுமார் 85,00,000 டன்கள் (முந்தியக் கணக்கு 79,00,000 டன்கள்.)

ஐரோப்பிய நாடுகளில் சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும் விளைச்சல் இருக்கக்கூடும்

மத்தியக் கிழக்கு நாடுகளில் துருக்கியில் மட்டுமே விளைச்சல் அதிகம்.

கனடாவில் விளைச்சல் பெருகியிருக்கிறது.

அமெரிக்காவில் சிறிது குறைந்திருக்கிறது. வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, அர்ஜெண்டைனா நாடுகள்தான் கோதுமை ஏற்றுமதியில் முன்னணியில் நிற்கின்றன; இவ்வாண்டு ஜனவரி—ஆகஸ்டு மாதங்களில் இந்த நாடுகளிலிருந்து 1,16,00,000 டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டது; சென்ற ஆண்டு இதே காலத்தில் ஏற்றுமதியான கோதுமை 89,00,000 டன்கள்.

இந்தியக் கைத்தறித் தொழில் பற்றி அமெரிக்கர் கருத்து

'ஆதிக்கம்' இல்லையென அறிவிப்பு

கடந்த வெள்ளியன்று, நம் இதழில், அமெரிக்க ஆடைத் தயாரிப்பாளரான மார்டின் கோல் என்பார், பம்பாய் வந்து, உள்ளூரிலுள்ள தொழிலாளர்களையும், அவர்களுடைய கைத்தறி நெசவுத் தொழில் திறமையையும் பயன்படுத்தி, இரண்டு புதிய தொழிற்சாலைகளைத் திறக்கப்போவதாகச் செய்தி வெளியிட்டதின் மூலம், இந்தியக் கைத்தறித் தொழிலில் அமெரிக்க ஆதிக்கம் ஊடுருவுமோ என்ற ஐயப்பாடு தொனித்தது.

4-ந் தேதியன்று, மார்டின்கோலும், அமெரிக்க வர்த்தகர் ஆலோசனை சர்வீஸ் டைரக்டர் ஹெரால்டு சாமுவேலும் பம்பாய் வந்து சேர்ந்துவிட்டனர்.

ஆரம்ப நிலையிலேயே, அச்செய்தியின் கருத்தை நாம் வெளியிட்ட தோரணையின் நிலைமைபற்றி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதினாலோ என்னவோ, அந்நிபுணர்களிருவரும், இப்போது, 'அமெரிக்க உற்பத்தி நிறுவனத்தை இங்கு ஏற்படுத்தும் உத்தேசம் எங்களுக்குக் கிடையாது,' என்று கூறியுள்ளனர்.

'எங்களுக்குத் தேவையான செருப்பு, 'புல் ஓவர்,' வேனிற்கால உடை ஆகியவற்றை இங்கு உற்பத்தி செய்வதற்கு உதவியளிக்கப் போகிறோம்; இவை யாவும், நாடெங்கிலுமுள்ள கிராமங்களில் வசிக்கும் நெசவாளர்களின் துணை கொண்டே உற்பத்தி செய்யப்படும்,' என்று அவர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தியக் கைத்தறித் தொழிலில் அமெரிக்க 'மார்க்கெட்' அதிக அக்கரை கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் சொன்னார்கள்:—

"பத்து இலட்சம், அல்லது அது போன்ற அளவு கைத்தறித் துணி மட்டுந்தான் அமெரிக்க 'மார்க்கெட்'டில் விற்பனையாகும் என்பதல்ல; இத்துறையில் உற்பத்தி செய்யப்படுவதையெல்லாம் நாங்கள் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறோம்," என்று அவர்கள் அழுத்தமாகக் கூறியுள்ளனர்.

"கைத்தறித் துணியில், அமெரிக்கர்கள் 'ஒரே மோகம்' கொண்டிருக்கின்றனர்; இங்குள்ள கைநுட்பத் தொழிலாளர்களும், நெசவாளர்களும் அமெரிக்கருக்குப் பூரண மன நிறைவை இதுபற்றி அளிக்க முடியும்; இவ்வளவு நளினமான நெசவுத் தொழிலின் பண்டைக்கால நுட்பங்களைத் தெரிந்தவர்கள் உலகில் வேறு எங்குமே கிடையாது; இந்தியாவில், இக்கலை, பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது; ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் மில் துணிகளுடன் இந்தியா போட்டியிட முடியாது; ஆனால், கைத்தறித் துணி உற்பத்தியில், இந்தியா, எந்த 'மார்க்கெட்'டிலும் முக்கியத்துவம் பெற்று, ஈடு இணையற்றதாக விளங்க முடியும்," என்று புகழ் மாலை சூட்டினர்.

தாங்கள் இங்கு வந்துள்ள நோக்கம் பற்றி அவர்கள் சொன்னார்கள்:—

"அமெரிக்கர்களின் தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப, இந்திய நெசவாளர்கள், தங்கள் தொழில் நுணுக்கங்களை மாற்றி அமைத்துக் கொள்ளும்படி தெரிவிக்கவே இந்நாட்டிற்கு வந்திருக்கிறோம்;

"கிராமத் தொழில் அடிப்படையில் கைநெசவுப் பட்டு, கம்பளி உடைகள், மிதியடிகள், பெண்களுக்கான ஆடைகள், மட்பாண்டங்கள், நகைகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுமானால், அமெரிக்க மார்க்கெட்டில் அவைகளுக்கு நல்ல 'கிராக்கி' ஏற்படும்," என்று குறிப்பிட்டனர்.

சிறுத்தையும் அரசியல்வாதியும்!

சென்னை—

"ஒரு அரசியல்வாதி சிறுத்தைக்கு ஒப்பானவர்; சிறுத்தைக்கு உடல் முழுவதும் வர்ணப் புள்ளிகள் இருக்கின்றன; அவைகளை மாற்றியமைக்க முடியாது; அதைப் போலவே ஒரு அரசியல்வாதியும் இருக்கிறார்;

"ஒரு அரசியல்வாதி கவர்னரானாலும்கூட, அரசியலில் தொடர்பற்று இருக்க இயலாது; ஆனால், 'கவர்னராக இருப்பவர் அரசியலில் தொடர்பு கொண்டிருக்கக் கூடாது,' என்று அரசியல் அமைப்பு கூறுகிறது,"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா குறிப்பிட்டுள்ளார்.

கோவாவைச் சுற்றி இரும்பு முள் வேலி!

இந்திய சர்க்கார் ஏற்பாடு

புனா, அக். 4—

ரூ. 7 இலட்சம் செலவில், 30 மைல் தூரத்திற்கு சவந்தவாடி, கார்வார், பெல்காம் ஆகிய கோவா நகரங்களின் அருகிலுள்ள மூன்று பகுதிகளில் இரும்பு முள் வேலி போடுவதற்கு இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனராம்.

இந்த மூன்று பகுதிகளின் வழியாகவே இதுவரையில், கோவாவில் சத்தியாக்கிரகம் செய்வதற்குச் சென்ற தொண்டர்கள் நுழைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இரும்பு முள் வேலி போடப்பட்டபின், அந்த வழியாக இனி எவரும் நுழைய முடியாது.

மாதம் ஒன்றுக்கு ரூ 5 இலட்சம் மதிப்புள்ள ஆடம்பரச் சாமான்கள், கோவாவிலிருந்து இந்தியாவுக்குக் கடத்தப்படுகிறதாம்; அப்பொருள்களுக்கு இந்தியாவில் 50 அல்லது 55 சதவிகித இலாபம் கிடைக்கிறதாம்!

அந்தப் பகுதியின் 150 மைல் எல்லைப் பிரதேசம் முழுமையும் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருப்பதால், கள்ளக்கடத்தலைத் தவிர்க்க முடியவில்லையாம்; அந்தப் பகுதிகளைத்தான் கள்ளக்கடத்தல்காரர்கள் அதிகமாக உபயோகித்தனராம்.

இந்தக் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்காகவே, அந்த இடங்களில் இரும்பு முள்வேலி போடுவதற்கு இந்திய சர்க்கார் தீர்மானித்தனராம்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு அரிசி ஏற்றுமதி

11 மாதங்களில் 80,000 டன்

கடந்த செப்டம்பர் திங்களுடன் முடிந்த 11 மாத காலத்தில் இந்தியாவிலிருந்து சுமார் ரூ. 5,25,00,000 மதிப்புடைய 80 ஆயிரம் டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதாம்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாகக் கடந்த நவம்பர் திங்களில்தான் அரிசி ஏற்றுமதிக்கு இந்திய சர்க்கார் அனுமதி தந்தனர்.

மேலும், இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் முடிய 2 இலட்சம் டன் ஏற்றுமதி செய்யலாம் என்றும் நிர்ணயம் செய்திருந்தனர்; ஆனால், நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும், குறைவாகவே ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும், செப். 30-ந் தேதிக்குப் பிறகும் தொடர்ந்து ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் அனுமதி தரவில்லை என்றும் தெரியவருகிறது.

கழகச் செய்திகள்

சென்னை 16-வது வட்ட தி. மு. கழகம்

4—9—55 காலை 10 மணியள வில், திருவேலியன் பேசின் தெரு; எண் 22 இல்லத்தில், தோழர் கோ செங்குட்டுவன் முன்னிலையில் 16-வது வட்ட தி.மு. கழகக் கிளை துவக்கப்பட்டது. அதுபோது தோழர் ஆசைமுத்துவைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

செயற்குழுக் கூட்டம்

25—9—55 காலை 10 மணிக்கு, கழக இல்லத்தில், நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், கிளைக் கழக வளர்ச்சிக்காகவும், துவக்க விழாக் கூட்டத்திற்காகவும் நிதி திரட்டுவதென் றும், 16—10—55-க்குள் துவக்க விழா நடத்துவதெனவும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய்—கொலாபா தி. மு. கழகம்

16—9—55 இரவு 9-30 மணியளவில் கூபரேஜ் திடலில் கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கிளைக் கழக வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன் சில அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அப்பமசமுத்திரம் தி. மு. கழகத் துவக்கம்

20—9—55ல், தோழர் எம். பி. சுப்பிரமணியம் தலைமையில் கிளைக் கழகம் துவக்கப்பட்டது. தோழர் என். கே. இராசு கொடியேற்றினார்; தோழர் சிற்றுளி ஏ சுப்பிரமணியம் கழகத்தைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றிய பின், தோழர் கே. சடையரைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது

சோமரசம்பேட்டை தி. மு. கழகம்

திருச்சி—சோமரசம்பேட்டை தி மு. கழகச் செயற் குழுக் கூட்டம் 1—10—55 மாலை 5 மணிக்கு தோழர் கே எம். முத்துசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் வி எம் கணேசனை செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பெரியகுளம் (மதுரை மா.) தி. மு. கழகம்

2—10—55 பிற்பகல் 3 மணிக்கு கழக அலுவலகத்தில், தோழர் எம். கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், தோழர் கே. சோமசுந்தரத்தைச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும், நகரசபைத் தேர்தல்களில் தலைமை நிலைய அறிக்கைப்படி நடந்து கொள்வதென்றும், நகரசபைத் தேர்தலில் கட்சி சம்பந்தமாக நிற்கும் அபேட்சகருக்கு நமது தோழர்கள் வேலை செய்வதாகத் தெரிந்தால் செயலாளர்கள் அத்தோழர்களை எச்சரிக்கை செய்ய அதிகாரம் அளித்தும் முடிவு செய்யப்பட்டது

பாவூர் சத்திரம் தி. மு. க.

2—10—55ல், தோழர் வே. பொ. தங்கம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வருகிற தீபாவளி அன்று பொதுக்கூட்டம் நடத்துவது என்றும், கழக நிதிக்காகச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது கலா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து நிதி திரட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்ட பின், கடந்த மாத வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

சென்னை 18-வது வட்ட தி. மு. கழகம்

2—10—55 காலை 10 மணிக்கு, சென்னை 18-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில், கிளைக் கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், விரைவில் கிளைக் கழக ஆறும் ஆண்டு விழா கூட்டம் நடத்துவதெனவும், கூட்டத்திற்கான நிதியை வசூலிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் கழக ஆக்க வேலை குறித்துத் தோழர்கள் பலர் ஆலோசனை கூறினர்.

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகம்

2—10—55 காலை 10 மணிக்கு, கழகப் பணி மனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், அக்டோபர் மாதக் கடைசி வாரம் அல்லது நவம்பர் துவக்கத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், தோழர்கள் க. துரை, மருத்துவன் ஆகிய இருவர்களைச் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தும், பொதுக்கூட்டத்திற்கு வசூலாகும் நிதியில் கூட்டச் செலவு போக மீதிப் பணத்தில் கழகக் கொட்டகையைப் புதுப்பிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

2—10—55 காலை 10 மணிக்கு, கழகப் பணி மனையில தோழர் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் எம். எப். பாபு அவர்களைச் செயற்குழு உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டும், 9—9—55ல் நடைபெற்ற 6-ம் ஆண்டு விழா வரவு-செலவு கணக்குகளை அடுத்த கூட்டத்தில் பரிசிலனை செய்வதெனவும், தோழர் எம். ராசு அவர்களின் விலகல் கடிதத்தைப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டும், 8—10—55ல் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பெங்களூர் — அக்கிப்பேட்டை தி. மு. க.

2—10—55 மாலை 3 மணிக்கு, கழக மனையில் தோழர் வி. கே நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்களின் தந்தையார் இராசரத்தினம் இயற்கை யெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், அண்மையில் சிறை சென்று மீண்ட தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்களைப் பாராட்டியும், சிறப்புச் சொற்பொழிவுக் கூட்ட வரவு செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும், பாக்கித் தொகையில் ரூ 150-க்குப் புத்தகங்கள் வாங்கிக் கழக நூல் நிலையத்தில் சேர்ப்பது என்றும், மற்றும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சித்தூர்—காந்திச்சாலை தி. மு. கழகம்

தோழர் வெ அருணு தலைமையில், சித்தூர் நகர தி. மு கழகம், காந்திச்சாலை கிளைக் கழகம் ஆகிய கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம், காந்திச்சாலை கிளைக் கழக இல்லத்தில் நடைபெற்றது. 16—10—55ல், தி. மு கழக ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், சித்தூர் மாவட்ட தி மு. கழக அமைப்பை முன்னிட்டு நடக்கவிருக்கும் மாவட்டத் தேர்தலை, சித்தூர்—காந்திச் சாலை கிளைக் கழகத்தில் நடத்துவதெனவும் மற்றுமொரு தீர்மானமும்நிறைவேற்றப்பட்டது.

மாரண்டஅள்ளி தி. மு. க.

4—10—55ல் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கிளைக் கழகப் பொருளாளர் தோழர் எம் எஸ். ஜெயராமனின் விலகலை ஏற்றுக்கொண்டும், துணைச் செயலாளர் தோழர் மா. ரா. கோவிந்தராசன் கட்சிக் கட்டுப்பாடுகளை மீறி நடந்து கொண்டதால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டும் தீர்மானிக்கப்பட்டதுடன், புதிய பொருளாளராகத் தோழர் மா மு ரங்கநாதனைத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

சென்னிமலை தி.மு. கழகத் தோழர்கட்கு

"சென்னிமலையில் இது சமயம் அமைய இருக்கிற மக்கள் தொழிலாளர் சங்கத்தில் நமது கழகத் தோழர்கள் யாரும் உறுப்பினர்களாகச் சேரக்கூடாது; மேற்கொண்டு நாம் சங்கம் அமைப்பது பற்றியும், அல்லது பிற சங்கங்களில் இணைவது பற்றியும், வருகிற மாநில மாநாட்டில் உருவாகும் தொழிற் சங்கத்தைப் பற்றிய முடிவுக்குப் பின் இதுபற்றி முடிவு செய்யப்படும்" என்று 30—9—55 சென்னிமலை கழகப் பணி மனையில் நடைபெற்ற கிளைக் கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நகரசபைத் தேர்தல்கள் ஒத்திவைப்பு!

ஆந்திர மந்திரிக்கு எச்சரிக்கை

தாடப்பள்ளிக்குடம், அக் 3—

"ஆந்திர சர்க்கார், 'நகர சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைப்பது' என்று மேற்கொண்ட முடிவினை எதிர்த்து, மந்திரி சபையில் பிரஜா கட்சிப் பிரதிநிதியாக விருக்கும் உள்நிர்வாக இலாகா மந்திரி டாக்டர் ஏ. பி. நாகேஸ்வர ராவ் தனது பதவியை விட்டு விலகிவிட வேண்டும் — என்று விஜயவாடா பிரஜா கட்சி தீர்மானம் நிறைவேற்றுமுன், மாநில பிரஜா கட்சியின் ஆலோசனையைப் பெறவில்லை," என்று கட்சித் தலைவரான டி. விசுவநாதம் தெரிவித்திருக்கிருர்.

"அந்த மந்திரி பதவியினின்றும் விலகவேண்டும்—என்று உத்திரவிடுகிற கேள்வியே எழவில்லை; ஏனெனில், ஐக்கிய காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் பெரும்பான்மை முடிவுக்குக் கட்டுப்படுவதாக, அக்கட்சியில் சேரும்போது, பிரஜா கட்சி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டது; கட்சியின் பெரும்பான்மையினர் தேர்தலை ஒத்திப் போடவேண்டும் என்று முடிவு செய்திருப்பதை யொட்டி நாம் கட்டுப்பட்டுத்தானுகவேண்டும்; மந்திரி சபையும் அந்த முடிவை மேற்கொண்டிருக்கிறது; மாநில கட்சியினைக் கேட்காமல், கிளைப் பிரிவுகள், முரண்படும் அறிக்கைகளை வெளியிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்," என்றும், டி விசுவநாதம் அறிவித்திருக்கிருர்.

தேர்தல் செலவு

கர்னூல், அக். 4—

"ஆந்திர மாநில சட்டசபைக்கு இடைக்காலத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களுக்காக சர்க்கார் ரூ 35,18,000 செலவிட்டனர்,"

என்று, முதன் மந்திரி கோபாலர் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சட்டசபையில் தெரிவித்திருக்கிருர்.

முன்னைய மந்திரி சபையின் வீழ்ச்சியினுல் இந்தத் தேர்தல் நடத்த வேண்டிவந்தது.

கடும் மழைக்கு 21-பேர் பலி!

ஏராளமான சேதங்களும் ஏற்பட்டுள்ளது

அம்பாலா, அக். 4—

கடந்த ஞாயிறு இரவிலிருந்து பஞ்சாபின் பல பாகங்களிலும் கடுமையான மழை பெய்ததின் விளைவாக, வீடுகள் இடிந்து விழுந்து 21 பேர் உயிரிழந்தனராம்; பலர் காயமடைந்தனராம்.

மழையுடன் வீசிய பலமான காற்றினுல், மரங்கள், தந்திக் கம்பங்கள் சாய்ந்துவிட்டனவாம்; நூறு வீடுகள் இடிந்து விழுந்ததுடன், பயிர்களுக்கும் ஏராளமான சேதம் ஏற்பட்டுள்ளதாம்.

இவ்வளவு சேதங்களுடன் ஏராளமான அளவில் சொத்துச் சேதமும் ஏற்பட்டுள்ளதாம்.

மணமே ஆகவில்லை— மழலைக்குப் பெயரிடுகிருர்கள்!

பெல்லாரி, அக். 4—

மாநில புனரமைப்புக் குழுவினர் செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ள சிபாரிசுகளின்படி, பெல்லாரி சிறுகுப்பா, ஹோஸ்பெட் ஆகிய வட்டங்கள் ஆந்திர மாநிலத்துடன் இணைந்தவுடன், சென்னையில் உள்ள பல ஆந்திர சர்க்கார் அலுவலகங்களும், பெல்லாரியில் தேவையான அளவு கட்டிடங்கள் கிடைக்கும் என்பதால் அங்கு மாற்றப்படும் என்று நம்பகமாகத் தெரிகிறது.

புதுடில்லியிலிருந்து வரும் தந்திகளும், டெலிபோன் செய்திகளும் இந்த மாற்றத்தை உறுதி செய்கின்றன என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், 'பெல்லாரி தொடர்ந்து மைசூரிலேயே இருக்க வேண்டும்,' என்று கோரி, கன்னடியர்கள், அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர் என்றும் வேருெரு செய்தி தெரிவிக்கிறது.

"பெல்லாரி ஆந்திராவுடன் இணைய சிபாரிசு செய்யப்படுமானுல், அதை எதிர்த்துக் கன்னடியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடும்போது அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்." என்று கன்னடத் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கின்றனராம்.

இதற்கிடையில், அசம்பாவித சம்பவங்கள் எதுவும் பெல்லாரியில் நடைபெற்று விடாமல் தடுப்பதற்காக, துங்கபத்திரா அணைக்கட்டுப் பிரதேசம், சர்க்கார் கட்டிடங்கள் முதலியனவற்றிற்கு ஏராளமான பாதுகாப்பு வசதிகள் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

தூது செல்வர்

'கர்நாடகத்திலேயே, பெல்லாரி முதலிய மூன்று வட்டங்களும் தொடர்ந்து நீடிக்கச் செய்யவேண்டும்,' என்று பண்டித நேருவிடம் வற்புறுத்திச் சொல்வதற்காக, பெல்லாரி மாவட்டக் காங்கிரஸ், அகில கர்நாடக இணைப்பு லீக், கர்நாடக பிரதேச காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகளடங்கிய தூதுக் குழு ஒன்று, 6-ந் தேதி பிரதமர் நேரு பெங்களூருக்கு வரும்போது அவரைச் சந்திக்கும் என்று தெரிகிறது.

எது வேண்டும்?

பெல்லாரியா? தங்கவயலா?

விஜயவாடா, அக். 3—

"ஐதராபாத்தைத் துண்டாடி, அதில் உள்ள தெலுங்குப் பகுதிகளை ஆந்திராவுடன் இணைத்து, ஐதராபாத் நகரைத் தலைநகரமாகக்கொண்ட விசால ஆந்திர மாநிலம் அமைவது விரும்பத் தக்கதே,"

என்று பத்திரிகையாளரிடம் பேசுகையில் மக்கள் சபை உதவித் தலைவரான அனந்தசயனம் அய்யங்கார் தெரிவித்திருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"எனக்கு, மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் பற்றி எதும் தெரியாது; ஆனுல் ஐதராபாத்தில் உள்ள தெலிங்கானு, ஆந்திராவுடன் இணைந்து ஒரே உருப்பாக அமைவது நல்லதெனக் கருதுகிறேன்; ஆனுல் இதனை அந்த வட்ட மக்களே முடிவு செய்யுமாறு விட்டுவிடுவது நலம்; ஐதராபாத்தில் உள்ள தெலுங்கர்கள் ஒரு பெரிய ஆந்திரம் அமைவதை விரும்புவார்கள் என்றும், விசால ஆந்திரம் அமையும் என்றும் நான் நம்புகிறேன்;

"மைசூர் முன்னுள்ள சிக்கல் எல்லாம், பெல்லாரியை ஆந்திரர்களுக்குத் தந்துவிட்டு, கோலார் தங்கவயலை வைத்துக்கொள்வதா? அல்லது தங்கவயலைத் தந்துவிட்டு பெல்லாரியை வைத்துக்கொள்வதா?—என்பதாகத்தான் இருக்க முடியும்; ஏனெனில், பெல்லாரி மீதும், தங்கவயல் மீதும் ஆந்திரர்கள் சொந்தம் கொண்டாட நியாயமிருக்கிறது;

"பெல்லாரி ஆந்திரத்தின் ஒரு பகுதியாகும்; ஆந்திர மாநிலத்தின் அபிவிருத்திக்காகத்தான் துங்கபத்திரா அணைக்கட்டுத் திட்டம் உத்தேசிக்கப்பட்டது; அங்குள்ள கன்னடியரின் எண்ணிக்கை சிறிது அதிகமாயிருப்பது மட்டுமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதல்ல; நிர்வாக சவுகரியம்கூட கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்;

"தங்கவயலா, பெல்லாரியா— என்ற கேள்வி வருமாயின், ஆந்திரர்கள், பெல்லாரியையே பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கவேண்டும்."

மதுபான 'ரேஷன்' ஒழிந்தது!

சுவீடன் நாட்டில் கடந்த 36 ஆண்டுக் காலமாக மதுபானங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 'ரேஷன்' கடந்த அக்டோபர் முதல் தேதியுடன் ஒழிக்கப்பட்டுவிட்டது; இந்த நடவடிக்கை, சுவீடன் மக்களுக்குப் பெரும் மகிழ்வைத் தந்திருக்கிறதாம்.

பலர், தங்களுக்குத் தரப்பட்டிருந்த மதுபான 'ரேஷன்' கார்டுகளைக் கொளுத்தியும், கிழித்தெறிந்தும் மகிழ்ச்சி கொண்டாடினராம். புதிய மதுபானக் கடைகள் திறக்கப்படுவதையும், வெளிநாட்டுச் 'சரக்கு'கள் அங்கு குவிவதையும் எதிர்பார்த்து பலர் நாக்கைச் 'சப்பி'க்கொண்டிருக்கின்றனராம்!

இது என்ன நடவடிக்கையோ?

10,000 இந்திய வியாபாரிகள் பாதிக்கப்படுவர்

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அங்கோலாவிலும், கிழக்கு ஆப்பிரிக்கக் கரையோரத்திலுள்ள மொசாம்பியிலுமுள்ள 10,000 இந்திய வியாபாரிகள், தங்களுடைய தாயகத்திற்குப் பணம் அனுப்பக் கூடாதென லிஸ்பன் சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

கோவா மீது இந்திய சர்க்கார் மேற்கொண்டிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிராகவே, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறதாம்.

செயற்கைப் பட்டு நூல் கிடைக்கவில்லையாம்!

15 ஆலைகள் மூடப்படுகின்றன

இரயில்வே போக்குவரத்து வசதிகள் இல்லாததினுலும், செயற்கைப் பட்டுநூல் கிடைக்காததினுலும் அமிருதசரசில் 15 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கிறதாம். இதனுல், ரூ 15 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் துணி உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதியொருவர் கூறியுள்ளாராம்.

திரு-கொச்சி சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம்

போலீசார் பலாத்காரம்: பலருக்குப் படுகாயம்

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிராகரிக்கப்படுகிறது

திருவனந்தபுரம், அக். 5—

திரு-கொச்சி சட்டசபைக் கூட்டம் இன்று துவங்கியபோது, சபைக் கட்டிடத்தின் முன் ஏராளமானோர் கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்திருக்கின்றனர்.

சட்டசபை துவங்கிய இன்று, மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாகப் புரட்சி சோஷலிஸ்டு கட்சியினர் அறிவித்திருந்தனர்.

அதை ஒட்டி, பல்வேறு தொழிற் சங்கங்களையும் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்களின் ஊர்வலம் ஒன்றை புரட்சி சோஷலிஸ்டு கட்சியினர் தலைமை ஏற்று ஊர்வலமாக அழைத்துவந்தனர்; ஊர்வலம், ஆர்ப்பாட்டம் முதலியன நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையையும் மீறி அவர்கள், ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர்.

ஊர்வலம் சட்டசபைக் கட்டிடத்தை அடைந்தபோது, போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் ஏற்பட்ட மோதுதலின் விளைவாகப் பலருக்குப்படுகாயம்பட்டிருக்கிறது.

போலீஸ் பாதுகாப்பை மீறி சபைமுன், ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்கள் எழுப்பியிருக்கின்றனர்.

காயம்பட்ட பலரும், மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

இதை ஒட்டி, சட்டசபையில் உள்ள எதிர்க் கட்சியினர் எல்லோரும் வெளிநடப்பு செய்திருக்கின்றனர்; அரை மணி நேரம் வரை அவர்கள் சபைக்குள் வரவில்லை.

பின்னர், எதிர்க் கட்சித் தலைவரான டி. வி தாமஸ் "அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களிடம், போலீசார் அளவுக்கு மீறி பலாத்காரமாக நடந்துகொண்டனர்," என்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

நிராகரிப்பு

பனம்பள்ளி கோவிந்த மேனன் மந்திரி சபை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகர் நிராகரித்திருக்கிறார்; தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் சபையில் இல்லாததினாலேயே தீர்மானம் நிராகரிக்கப்பட்டதாம்.

தல அபிவிருத்தி வேலைகள்

மேலும் ரூ. 50 இலட்சம் மானியம்

இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள தல அபிவிருத்தி வேலைகளுக்காக இந்தியப் பேரரசிடமிருந்து மேலும் ரூ 50 இலட்சம் சென்னை சர்க்காருக்கு மானியமாகக் கிடைக்கக்கூடும் என்று தெரிய வருகிறது.

ஏற்கனவே இந்தக் காரியத்திற்காக வழங்கப்பட்ட ரூ. 59.40 இலட்சம் போதுமானதல்ல; மேலும் ரூ. 50 இலட்சம் வேண்டும்—என்று சென்னை சர்க்கார் எழுப்பியிருந்த கோரிக்கைக்கு இணங்கவே இந்தத் தொகை வழங்கப்படலாம் என்று தெரிகிறது.

ஆசிரியர் பயிற்சி

மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் உதவி

ஆசிரியர் பயிற்சிக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான மாநிலங்களின் திட்டங்களுக்கு உதவுவதற்கென இந்திய சர்க்கார் ரூ 50-இலட்சம் ஒதுக்கியுள்ளனர் என்று தெரிகிறது.

1955—56-ம் ஆண்டில் இந்தக் காரியத்திற்காக மாநிலங்கள் செய்யும் செலவில் 60 சத விகிதம் வரை, இந்தியப் பேரரசு ஒதுக்கியுள்ள தொகையிலிருந்து தரப்படும் என்று தெரிகிறது.

ஐதராபாத் மந்திரிகள் மீது கண்டனத் தீர்மானங்கள்

சட்டசபையில் தோற்றன

ஐதராபாத், அக். 5—

ஐதராபாத் மந்திரி சபை மீது கண்டனம் தெரிவித்தும், ஒரு மந்திரி மீது தனியாகக் கண்டனமும், மற்றொரு மந்திரி மீது நம்பிக்கை இல்லையென்று தெரிவித்தும் எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் தோற்றுவிட்டன.

இரண்டு நாள், தீர்மானங்களின் மீது பலத்த விவாதம் நடைபெற்றிருக்கிறது.

விவாதத்தின்போது, எதிர்க் கட்சியினர், மந்திரிகள் மீதும், சர்க்கார் மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தனர்.

விவாதத்திற்குப் பதிலளித்து முதன் மந்திரியும், தொடர்புடைய இரு மந்திரிகளும் பேசியிருக்கின்றனர்.

"எதிர்க்கட்சியினர், வரப்போகும் தேர்தலை மனதில்கொண்டு இம்மாதிரி ஆட்சியாளர் மீது குறைகளைக் கற்பிக்கின்றனர்; காங்கிரஸ் மந்திரி சபையின் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறி வருவது எதிர்க்கட்சியினருக்குப் பிடிக்கவில்லை; சர்க்கார் நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்து அமுலாக்கி வருகின்றனர்; இதனால், நிலப்பசி கொண்டுள்ள கல்வி அறிவில்லா மக்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு எதிர்க்கட்சியினருக்குச் சிறிதும் கிடைக்கவில்லை; எதிர்க்கட்சியினரால் தங்களுக்கு உபயோகமான நன்மை ஏதும் இல்லை என்பதை மக்கள் உணரத் தலைப்பட்டுவிட்டனர்; எனவே, ஆத்திரமடைந்துள்ள எதிர்க் கட்சியினர், இப்படியெல்லாம் மந்திரி சபை மீது குறைசொல்ல முற்படுவது இயற்கையே" — என்று, முதன் மந்திரி மழுப்பியிருக்கிறார்.

முதன் மந்திரியும், இதர இரு மந்திரிகளும், எதிர்க் கட்சியினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் சபையில் பதில் தந்திருக்கின்றனர்.

பின்னர் தீர்மானங்களின்மீது வாய்மொழி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தீர்மானங்கள் தோல்வியுற்றன.

ஓகோ! அதனால்தான் தமிழ் நாடு புறக்கணிக்கப்படுகிறதா?

"இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலும், தமிழ் நாட்டில் காணப்படுவதைப்போன்ற நுண்ணறிவு படைத்த இத்தனை முகங்களை நான் கண்டதில்லை; இவர்களுக்கு 'வாய்ப்பு'கள் மட்டும் கிடைத்தால், அதை அவர்கள் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில், எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை,"

என்று, பிரதமர் நேரு, சிறிது நேர சிந்தனைக்குப் பின், வேலூரில், நிருபர்களிடை கூறியதாகச் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் கவசம்பட்டு வருகை

8—10—55 மாலை 4 மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, கவசம்பட்டு (வ. ஆ.) பஞ்சாயத்து போர்டு சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

மாலை 6 மணிக்கு, தோழர் கே. பி. நவகோடி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், முல்லை சத்தி ஆகியோர் பேசுவர். அதுபோது மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

உறையூர்

டாக்கர் ரோட்டில்

7—10—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். எஸ். மணி

பேசுவோர்:

சிற்றுளி சுப்பிரமணியம்

எஸ். நெடுமாறன்

★

சென்னை (மயிலை)

ராக்கியப்ப முதலி தெருவில்

8—10—55 மாலை 5½ மணிக்கு

தலைவர்: பி. வீ. ஆனந்தன்

பேசுவோர்:

கி. மனோகரன்

இளம்பரிதி

சென்னை மாநில

கைத்தறி நெசவாளர்

கூட்டுறவுச் சங்கம்

(பேசின் பிரிட்ஜ் தொழிற்சங்கம்)

★

7—10—55 வெள்ளி மாலை 6 மணிக்கு, சென்னை-சூளை, கான்ரான்ஸ்மித் நகர் திரு. வி. க. திடலில் மாபெருங் கூட்டம், சங்கத் தலைவர் தோழர் எஸ். பக்கிரிசாமி எம். எல். ஏ., தலைமையில் நடைபெறும். தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என்.வி.நடராசன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். சி. சி. அந்தோனி எம்.எல்.ஏ., ஆகியோர் பேசுவர்.

அதுசமயம், தி. மு. கழக மாநில மாநாட்டுக்கு தொழிற் சங்கச் சார்பில், தி. மு. க. துணைப் பொதுச்செயலாளரிடம் நிதி அளிக்கப்படும்.

தி. மு. இளைஞர் படிப்பகத் திறப்பு விழா

8—10—55 அன்று, கல்மண்டபத்தில் (விழுப்புரம் வட்டம்), தோழர் தமிழ்மணி தலைமையில் நடைபெறும். தோழர் பொன். சொக்கலிங்கம் கொடியேற்றிவைப்பார். தோழர் தில்லை வில்லாளன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

7—10—55 மாலை 6½ மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் தெ. கணேசன் தலைமையில் நடைபெறும். 'ஒழுக்கம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

'தென்றல்'

ஆசிரியர்: கண்ணதாசன்

5—11—55 இதழில்:

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் M.L.A., எழுதும்

'திருக்குறள் புது உரை தேன் துளிகள்'

ஆரம்பம்

★

1—10—55 முதல் வெளிவந்துகொண்டிருக்கிறது:

கண்ணதாசன் எழுதும்

'வேலங்குடித் திருவிழா'

★

22—10—55 இதழில்:

'வெண்பாப் போட்டி'

புது முறை!

மற்றும் பலப் பல!

தனி இதழ்: அணா 2 :: ஆண்டுச் சந்தா: ரூ. 6

'தென்றல்' - சென்னை-6

எச்சரிக்கைக்குப் பின் அமைதி ஏற்பட்டதாம்

சிறைச்சாலைக் கைதிகள் பூட்டப்பட்டுவிட்டனராம்

ஐதராபாத், அக். 5—

செகந்திராபாத் மாவட்டச் சிறையில், நேற்று மாலையிலிருந்து அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாமல் அட்டகாசம் செய்து வந்த 500 கைதிகள், இன்று போலீசார் விடுத்த இறுதி எச்சரிக்கைக்குப் பிறகு பணிந்துவிட்டனராம்.

இரவெல்லாம் காவல் காத்த பின்னர், 'அமைதியாக அவரவர் அறைகளுக்குச் செல்லவில்லையானால் பலாத்காரம் உபயோகிக்கப்படும்,' என்று, போலீசார் இன்று காலையில் எச்சரிக்கை விடுத்தனர். கைதிகள் எல்லோரும் இப்பொழுது அவரவர்கள் அறையில் பூட்டப்பட்டுவிட்டனர்.

உணவு விநியோகம் சம்பந்தமாக இத்தகராறு எழுந்ததாகத் தெரிகிறது

குடிசைகளில் வாழும் 1,600 குடும்பங்கள்

வேறு இடங்களில் குடியேற்றி வைப்பதற்கு சர்க்கார் உதவி

சென்னை, அக். 4—

மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் குடிசைகளில் வாழும் சுமார் 1,600 குடும்பங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி, டிரஸ்ட்புரம் எனப்படும் தென்சைதாப்பேட்டை பிரதேசத்திலும், புலியூர் அபிவிருத்தி டிரஸ்ட் பிரதேசத்திலும் குடியேற்றி வைப்பதற்காக நகர அபிவிருத்தி டிரஸ்ட் சமர்ப்பித்திருந்த திருத்தப்பட்ட திட்டங்களை சர்க்கார் அங்கீகாரம் செய்துவிட்டனர்.

குடியேற்றி வைக்கும் செலவுக்காக ரூ 1,38,400 டிரஸ்ட்டுக்கு மானியம் தருவதற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளது. இதே மாதிரி மானியம் தருமாறு நகர சபையும் சர்க்காரால் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

புலியூர் அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்தில் குடிசை வாழ் மக்கள் குடியேறுவதற்கு நிலம் வாங்குவதற்காக நடப்பு ஆண்டில் டிரஸ்டுக்கு ரூ 5 லட்சம் கடனாகத் தருவதற்கு சர்க்கார் முன்வந்திருக்கிறது.

அறிவிப்பு

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்காக நிதி அனுப்பிவைக்கும் தோழர்கள் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பெயருக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இனி நிதி அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், இராயபுரம், சென்னை—13,' என்ற முகவரிக்கே நிதியினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

'அறிவகம்' சென்னை-13 6—10—55 — பொறுப்பாளர் தி. மு. கழக தலைமைநிலையம்

நெல் பயிர்களில் பூச்சிகள் இறங்கின?

பாதிக்கப்படும் மாவட்டங்கள் விவரம்

சென்னை, அக். 4—

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களில், நெல் பயிரில் பூச்சி இறங்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில்—மதுராந்தகம், செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சீபுரம், பொன்னேரி தாலுகா கிராமங்களிலும், வட ஆர்க்காட்டில்—வந்தவாசி, செய்யாறு தாலுகாக்களிலும், சேலம் மாவட்டத்தில்—அரூர், தர்மபுரி, சேலம், கரிபட்டி பகுதிகளிலும், தஞ்சையில் — ஆலங்குடி பிர்க்கா, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலும், மதுரை பெரியகுளம் தாலுகாவிலும் நெல் பயிரில் பூச்சி இறங்கி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

'நடவு' நடுவதற்கு முன்பும், நட்ட பின்னரும் விவசாய இலாகா உதவியுடன் 'பி. எச் சி.' மருந்து தெளிப்பதால் இந்த நோயைத் தடுத்துவிடலாமென்றும் அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.